தினகரன்
கோவை 24 டிசம்பர் 2012

## தமிழகத்தில் 800 பேர் பாதிப்பு

# ஆண் குழந்தையை மட்டும் தாக்கும் 'டிஎம்டி' நோய்

சேலம், டிச.24: ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கக் கூடிய நரம்பு தசை சிதைவு நோய், தமிழகத்தில் 800 குழந்தைகளை தாக்கியுள்ளது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. மருந்தில்லா இந்நோய்க்கு, போதிய விழிப்புணர்வு இல்லாததால் பலர் அறிகுறிகள் தெரியாமலேயே இறக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நெருங்கிய சொந்தத்தில் திருமணம் செய்வது, மரபணு குறைபாடுகள் காரணமாக நரம்பு தசை சிதைவு (Duchene Muscular Dystrophy) நோய் ஏற்படுகிறது. சுருக்கமாக, டி.எம்.டி., எனலாம். இந்நோய் ஆண் குழந்தைகளை மட்டுமே குறிவைத்துத் தாக்குகிறது. காரணம், ஆண்களிடம் உள்ள குரோமோசோம்கள்தான். இந்த வகையில், டி.எம்.டி., நோயும், ஹீமோஃபீலியா நோய்போல்தான்.

ஆண்களிடம் பொதுவாக ஒரு 'எக்ஸ்', ஒரு 'ஒய்' குரோமோசோம் மட்டுமே உள்ளன. 'எக்ஸ்' குரோமோசோம்கள் சிதைவுறும் போது இந்நோய் உருவாகிறது.



பெண்களுக்கு, இரண்டு 'எக்ஸ்' குரோமோசோம்கள் இருப்பதால் ஒன்று சிதைவடைந்தாலும் மற்றொரு குரோமோசோம் மூலம் அவர்கள் இந்நோய் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

ஆண் குழந்தைகளுக்கு இரண்டரை வயதாக இருக்கும்போது இந்நோய் குறைபாடுகள் லேசாக தெரிய ஆரம்பிக்கும். அவர்களை உற்று கண்காணிப்பதன் மூலம் குழந்தை பருவத்திலேயே நோயின் தன்மையை கண்டறிய முடியும் என்கிறார், ஜெனிடிக்ஸ் ஆராய்ச்சியாளர் லட்சுமி. இவர், கோவையில் உள்ள தசை சிதைவு நோய்க்கு இலவச சிகிச்சை, ஆலோசனைகளை வழங்கி வரும் எம்.டி.சி.ஆர்.சி., டிரஸ்டின் இயக்குநர்.

அவர் கூறுகையில், "இந்நோய் பாதித்த ஆண் குழந்தைகள் 2 முதல் 3 வயது வரை நன்றாக இருந்து, பின்பு படிப்படியாக பலவீனப்படுவார்கள். கெண்டைக்காலில் வீக்கம் ஏற்படும். உட்கார்ந்து எழ, நடக்க, ஓட, படி ஏற சிரமப்படுவார்கள்.

10–15 வயதில், நடக்கும் திறனை இழந்து சக்கர நாற்காலியின் உதவி தேவைப்படும். இவைதான் இந்நோயின் அறிகுறிகள்.

இந்த நோயை முற்றிலும் குணப்படுத்தக்கூடிய மருந்துகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆரம்ப நிலையிலேயே நோயின் பாதிப்பு அளவை டி.என்.ஏ., பரிசோதனை மூலம் கண்டறிந்து, உயிர் வாழச் செய்ய முடியும். உரிய நேரத்தில் இதையும் செய்யாவிட்டால், சுவாச பிரச்னை ஏற்பட்டு 25–30 வயதுக்குள் உயிரிழப்பு ஏற்படவும் வாய்ப்பு உண்டு.

தென்னிந்தியா முழுவதும் நடத்திய ஆய்வில் இதுவரை 2000 குழந்தைகளுக்கு டிஎம்டி பாதிப்பு உள்ளது. தமிழகத்தில், சுதாதாரத் துறையுடன் இணைந்து நடத்திய ஆய்வில் 800 குழந்தைகளுக்கு இந்த நோய் பாதிப்பு உள்ளது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. சேலம் வட்டாரத்தில் ஒரே குடும்பத்தில் இரண்டு மூன்று குழந்தைகளுக்குக்கூட இந்த பாதிப்பு உள்ளது தெரியவந்துள்ளது,'' என்றார்.

### இலவச சிகிச்சைக்கு

நரம்பு தசை சிதைவு, தண்டுவட தசை சிதைவு நோய்கள் குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாததால் பல குழந்தைகள் இறந்துள்ளதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. கோவையில் உள்ள எம்டிசிஆர்சி அறக்கட்டளை இந்த நோய்க்கு கட்டணமின்றி சிகிச்சை வழங்கி வருகிறது. நோய் அறிகுறிகள் உள்ளவர்கள், சிகிச்சை தேவைப்படுவோர் இந்த அறக்கட்டளையை 94444 02686, 94890 53701 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.